மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சி சிறப்பும் மாங்குடிமருதனாரின் எடுத்துரைப்பும்

**அ. பாலகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கே. ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

## முன்னுரை

தமிழகத்தை முற்காலத்தில் ஆட்சிப் புரிந்த மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களின் வரலாறுகளைப் படிக்கும்போது அவர்தம் வரலாறுகள் வீர உணர்வினைத் தூண்டுவனவாக அமைகின்றன. இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு முதலானவைகளைக் கொண்டும் மூவேந்தர்களின் வரலாற்றினை அறியலாம். மூவேந்தர்களுள் பாண்டியர்கள் பெரிதும் சிறப்புக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஏனெனில், தமிழகத்தின் பெரும் பகுதியை ஆட்சி செய்ததோடல்லாமல், தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவி மொழியை வளர்த்தனர். இதனால் இலக்கியங்கள் பல்கிப் பெருகின. "மதுரைக்காஞ்சியில்" மாங்குடி மருதனார் எடுத்துரைக்கும் பாண்டிய மன்னர்களையும் அவர்கள் வழிவந்த செழியனையும் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## பாண்டியர் பரம்பரை

மதுரைக்காஞ்சி செழியனைப் பற்றிக் கூறுமுன் அவன் முன்னோர்கள் பற்றியும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மன்னனைப் பற்றிக் கூறும்போது அவனது முன்னோர்களின் ஆட்சி

சிறப்பினைக் கூறும் முறை வழக்காக இருந்துள்ளது. அகன்ற வானில் காற்றானது வலது பக்கமாகச் சுழன்று பகல் பொழுதை உருவாக்கும் சிவந்த கதிரவனும், இரவில் ஒளியைத் தரும் வெண்திங்களும் குற்றமற்று ஒளிர்ந்து நின்று, தேவையறிந்து கொடுப்பது போன்று வேண்டியவாங்கு மழை பெய்தது. அதனால் திசைகள் நான்கும் செழித்து, விதைத்த வித்துகள் ஆயிரம் ஆயிரமாகப் பல்கிப் பெருகியுள்ளன.

"புகழ்நிறைந்த நல்மாந்தரொடு
நல்ஊழி அடிப்படர,
பலவெள்ளம் மீக்கூற
உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக"

(ம.கா,பா.வரி. 20 - 24)

இத்தகு உலகைப் பாணடியர்கள் சுமந்ததால் அவ்வுலகு பொலிவோடு அமைந்தது. உண்டும் குறையாத மிகுதியான வளத்தால் செல்வங்கள் குறையாது கண்களுக்கு விருந்தாகின. மக்கள் பொய் அறியாது மெய்யையே பேசக் கூடியவர்களாக இருந்தனர். மக்கள் மன்னர்க்கு அடிபணிந்து நடந்தனர். அதனால் பல ஆண்டுகள் புகழோடு ஆட்சி புரிந்த உயர்குடியில் வந்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்று மாங்குடி மருதனார் எடுத்துரைக்கின்றார்.

**நிலந்தருதிருவிற் பாண்டியன் சிறப்பு**

சேர, சோழர் ஆகிய இருபெரும் வேந்தர்களையும் மற்ற குறுநில மன்னர்களையும் போர் செய்து வென்றவன் பாண்டியன் அருவிகளையுடைய பெரும் மலைப்பகுதிகளையும் கடந்து பகைவர் நாடுகளை அழித்துப் பாலை நிலமாக்கியவன் இவன். போர் ஆற்றலும், மிகப்பெரிய படை வலிமையையும் கொண்டவன். இயற்கையின் சீற்றத்தால் தமிழகத்தின் தென்பகுதியைக் கடல் கொள்ள, இருபெரும் வேந்தரையும், வேளிரையும் வென்று அவர்களுக்கு உட்பட்ட பகுதியைப் பாண்டிய நாடாக்கிய சிறப்புக்குரியவன் நிலந்தரு திருவிற் பாண்டியன். இவனது சிறப்பினை,

"உயர்ந்துஓங்கிய விழுச்சிறப்பின்
நிலம்தந்த பேர்உதவிப்
பொலந்தார் மார்பின் நெடியோன்"

(ம.காஇபா.வரி. 59 - 61)

என்று மாங்குடி மருதனார் எடுத்துரைக்கிறார்.

**நிலந்தருதிருவின் நெடியோன் காலம்**

தொல்காப்பியம் கபாடபுரத்தில் கி.மு. 306க்கு முன்பு அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர். கடல்கோளுக்குப் பின்னரும் பாண்டியன் வாழ்ந்திருந்தனன். ஆதலின் அவன் காலம் ஏறத்தாழ கி.மு 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி (கி.மு 350 - 300) எனலாம். வேறு தக்க

சான்றுகள் கிடைக்கும் வரையில் தொல்காப்பியம் கி.மு. 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் செய்யப்பட்டது என்றும் அக்காலமே நெடியோன் காலம் என்றும் கொள்வது பொருத்தமாகும் என்று இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி. ப. 341)

"கடைச்சங்கத்து இலக்கண நூல்கள் அகத்தியமும், தொல்காப்பியமும் என இறையனார் அகப்பொருளுரை கூறுகிறது. இடைச்சங்கம் கி.மு.306இல் நிகழ்ந்த கடல்கோளினால் முடிவுற்றது. தொல்காப்பியம் கி.மு.306க்கு முன் சில நூற்றாண்டுகளாவது இடைச்சங்க இலக்கணமாகப் பயன்பட்டிருத்தல் வேண்டும். ஆகவே தொல்காப்பியம் கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியது எனலாம். நிலந்தரு திருவற் பாண்டியன் அவையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பது அதன் பாயிரத்தால் விளங்குகிறது."(சங்ககால அரசர்கள். ப. 55)

இதனை நோக்கும் போது நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம். மேலும், "இவன் முசூடி நெடுங்காலம் ஆட்சி புரிந்திருத்தல் வேண்டுமெபதால் சங்கத்துச் சான்றோர் இவனை "நெடியோன்" என்று கூறியுள்ளனர். இதன் மூலம் முடிசூடி நெடுங்காலம் ஆட்சி செய்ததால் நெடியோன் என்ற சிறப்பைப் பெற்றான் என்பதனை அறியலாம். இவன் தமிழகத்தின் தென்பகுதியான குமரிநாடு முதலியன அழிவதற்கு முன்பு அங்கு ப.:றுளி என்றோர் ஆற்றை உருவாக்கி விழாவெடுத்து சிறப்பித்ததை,

"முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் ப.:றுளி மணலினும் பலவே"

(புறம்இபா.9,வரி.10 - 11)

என்னும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

இவன் காலத்தில் பாண்டிய நாட்டின் தென்பகுதி கடல்கோளில் அழிந்ததால் இவன் வடக்குப் பகுதியை வெற்றிகொண்டு மதுரையைத் தலைநகராகக் கொண்டுச் சிறப்பாக ஆட்சி செய்திருக்கிறான். இவன் காலத்தில் மதுரை பெரும் புகழைப் பெற்றிருந்ததை இலக்கியங்கள் பல எடுத்துரைக்கின்றன.

**பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி**

இவன் நிலந்தரு திருவிற் பண்டியனின் வழியில் வந்தவன். முதுகுடுமி என்பது இவனது இயற்பெயராக இருக்க வேண்டும். போரில் சிறந்து விளங்கும் இவன் போர்க்குச் செல்லும் முன்பு, தான் படையெடுத்து வருதலைப் பகைவர்க்கு அறிவிக்கும் அறவுணர்ச்சி உடையவன். தான் செய்யும் போரால், விலங்குகள், குற்றமற்ற அந்தணர், பெண்டிர், நோயாளர் போன்றோர் குயருறுவர் என்று முன்பே எச்சரித்துப் படையெடுத்துச் செல்லுதல் அறம் என்ற கொள்கை உடையவன். "வேதவிதிப்படி யாகங்கள் பல செய்யக்காரணமாய் இருந்ததால் இவன் பல்யாக சாலை முதுகுடுமி எனப்பெயர் பெற்றான்"

(சங்ககால அரசர்கள். ப. 57)

"பாண்டியருடைய முன்னோர்களில் ஆயிரம் வேள்விகள் இயற்றிப் புகழ் பெற்றான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. இது இவ்வேந்தனையே குறிக்கின்றது போலும். இவனைக் "கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தசிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதிராசன்" என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பது ஈண்டு அறியத்தக்கது" (பாண்டியர் வரலாறு, ப. 8)

என்பதன் மூலம் பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதி என்ற சிறப்புப் பெயரை அடைமொழியாகப் பெற்றவன் இவன் என்பது புலப்படும்.

மேலும், "மதுரைக்காஞ்சிக்குத் தலைவனான பண்டியன் நெடுஞ்செழியன் காலம் கி.பி. மூன்றாம நூற்றாண்டு அவனுக்குக் காலத்தால் முற்பட்டவன் இப்பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. எனவே, இவ்வழுதி வேள்விக்குடிச் செப்பேடுகளுக்கு உறுதியாக ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவன் என்று கூறலாம்." (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 343)

**மன்னருக்கு மன்னன் செழியன்**

பகைவர் நெருங்க இயலாத அரிய காவல் அரணங்களையும், மிக நீண்ட ஆழமான அகழியையும், உயர்ந்த கோபுரங்களையும், நீண்ட மதில்களையும் கொண்டு, வரிசையாக அமைத்த காவல் அரணங்களையும் கொண்ட தலைநகர் மதுரை. இந்நகரை ஆண்ட பாண்டியன் தெற்கே குமரி முதல் வடக்கே பேரிமையம் வரையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களை எல்லையாகக் கொண்டவன். இவ்வெல்லையிலுள்ள வேந்தரெல்லாம் இவன் ஏவல் கேட்டு நடந்தனர். இவ்வழி வந்த புகழொடு திகழும் மன்னர்க்கெல்லாம் மன்னன் செழியன் என மாங்குடி மருதனார் பாராட்டுகிறார்.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாஎல்லைத்
தொன்றுமொழிந்து தொழில்கேட்ப
வெற்றமொடு வெறுத்து ஒழுகிய
கொற்றவர்தம் கோன் ஆகுவை" (ம.கா,பா.வரி.70 - 74)

என்னும் பாடலடி புலப்படுத்தும்.

**செழியனின் கொடைத்தன்மை**

பாண்டியன் நெடுஞ்செழியன் யானைகளையும், அரியவகை பொன் வகைகளையும் பரிசாக வழங்கியுள்ளான். அச்சம் தரும் சிறப்பினையுடைய கன்றும் பிடியும் பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளன. பெண்யானைக் கன்றுகளுடன், பெரிய கொம்புடைய ஆண் யானைகளையும் வழங்கியுள்ளான். பொன் தாமரைகளைத் தலையில் அணிவித்தும் பல்வகையான அணிகலன்களையும், மத்தளம் போன்ற தோள்களையுடைய தடாரி என்னும் இசைக்கருவியை இசைக்கும் பாணர்க்கு வழங்கினான் எனபதை .

"முழவுத்தோள் முரண்பொருநர்க்கு
உருகெழு பெருஞ்சிறப்பின" (ம.கா,பா.வரிஇ99 - 100)

என்ற பாடல் மூலம் ஆசிரியர் கூறுகிறார்.

யாழிசை போன்று நயமாகப் பாடும் ஆடல் மகளிர் தம் வெறுங்கையையுடைய விறலியருக்குக் குறுந்தொடிகளையும், பாடும் பாணர் மகிழ களிறுகளையும் வழங்கினான் மதுரை அரசன் செழியன். இதன் மூலம், செழியன் புலவர்கள் பால் கொண்ட அன்பினையும், கொடைத்தன்மையும் அறிய முடிகிறது.

**தென்னவன் படை வலிமை**

பாண்டிய அரசன்பால் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை அக்காலத்தே இருந்துள்ளன. போரை வெல்லும் பெரிய படையை உடையவன் தென்னவன். தென்னவன் என்பது பாண்டியர்களின் சிறப்புப் பெயராகும். தென்னாட்டை ஆட்சி செய்ததால் தென்னவன் என்று அழைக்கப்பட்டனர்.

உயர்ந்த முகப்படத்தையும், நெற்றிப்பட்டத்தையும் மிக்க கோபத்தையும் கொண்ட யானையின் கண்ணில் மதநீர் வழியும், அது மலைமீது சேறு படிந்தாற் போன்றத் தோற்றத்தைத் தரும். மலை என்று வியக்கும் தன்மையும் தோற்றத்தையும் உடைய யானைகள், போர்த் தொழிலில் நன்கு பயிற்சி பெற்றுப் போர்க்களத்தைச் சிதைத்தன.

பாண்டிய மன்னர்களின் கொற்கை, தொண்டி முதலான கடற்கரைப் பட்டினங்களில் ஆண்டுதோறும் பலாயிரம் குதிரைகள் வந்திறங்கியதை வெளிநாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர்.

"மார்க்கப்போலோ என்பான் பாண்டியர்கள் குதிரைகள் வாங்குவதில் பெரும் பொருளைச் செலவிட்டான் என்று குறித்துள்ளமையால், பாண்டியர்களிடத்தில் சிறந்த குதிரைப்படை அந்நாளில் இருந்தது என்பது நன்கு அறியக்கிடக்கின்றது."

(பாண்டியர் வரலாறு. ப. 120)

பாண்டியனின் சிறப்புடைய வலிமையான குதிரைப் படைகள் பகைவரை நோக்கிப் போர்க்களத்தில் வெகுண்டெழுந்தன. அதனால் ஏற்பட்ட தூசியானது அகன்ற வானில் வெயிலை மறைக்குமாறு பரவியது. தாவிக் குதிக்கும் தன்மைகளை உடைய மிக வேகமாகச் செல்லும் குதிரைகளுடன், விரைவினையுடைய வலிமையான காற்று சுழல்வது போன்று சுழலும் தேர்ப்படையைக் கொண்டிருந்தாகவும், பெருகி வரும் வெள்ளத்தைக் கல்லணை கொண்டு தடுத்து நிறுத்துவது போன்று, திரண்டுவரும் பகைவரைத் தடுத்து நிறுத்தி அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்யும் போரை விரும்புகின்ற படைத்தலைவர்களையும், நின் வாளின் வெற்றிக்கு அமைந்த தனது முயற்சியையும் வாழ்த்துகின்ற மறவர்களையும் காலாள் படையாகக் கொண்டவன். பாண்டியன் வீரமறவர்களைக் கொண்ட நால்வகைப் படைகளைக் கொண்டிருந்ததாகவும், மாங்குடி மருதனார் எடுத்துரைக்கிறார்.

**போர்க்களக் காட்சி**

சங்ககாலம் வீரயுகக் காலம். ஆகையால் போர் நிகழ்வுகள் தவிர்க்க முடியாத ஒன்றாக அக்காலம் விளங்கியது. போரில் இறந்த வீரர்களின் உடலைத் தன் கொம்பிலே கோர்த்துக் கொண்டு யானைகள் திரிய, பிணங்களைத் தின்று பெண்பேய்கள் துணங்கைக்

கூத்தாட, ஆண்கள் தலையை அடுப்பாக்கி, வேந்தர்களின் இரத்தம் உலைநீராக, அவர்களின் கோபமே நெருப்பாக எரிய வீரர்களின் கடகம் அணிந்த கைகளைச் சதைத் சோற்றைத் துழாவும் துடுப்பாகக் கொண்டு பேய்மகள் விருந்து படைப்பதாக மருதனார் போர்க்களக் காட்சியை மதுரைக்காஞ்சியில் எடுத்துரைக்கிறார். புறநானூறும் திருமுருகாற்றுப்படையும் பின்னால் தோன்றிய கலிங்கத்துப் பரணியும் போர்க்களக் காட்சியை விவரிக்கின்றன.

**தலையாலங்கானத்துப் போர்**

தலையாலங்கானத்து வெற்றியின் மூலமே செழியன் மிகுந்த புகழையும் சிறப்பையும் பெற்றான். இவ்வெற்றியின் காரணமாகவே தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற பட்டப் பெயரைப் பெற்றுள்ளான்.

செழியன் காற்றைப் போன்று விரைந்து சென்ற பகைவரின் நாட்டினைத் தீயிட்டு அழிக்கக் கூடியவனாகவும். தலையாலங்கானம் என்ற இடத்தில் தங்கிப் பகைவர் அஞ்சும் படிப் போரிட்டு நெடுநிலை மன்னர்களாகிய சேரனையும், சோழனையும், குறுநில மன்னர்களான திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண் மான், பொருநன் ஆகிய ஐவரையும் வெற்றி கொண்டு, அவர்களின் அரசையும், முரசையும் கைப்பற்றியப் பேராற்றல் உடைய புகழ் மிக்க வேந்தனாகச் செழியன் திகழ்ந்தான்.

"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து
அரசுபட அமர் உழக்கி
முரசுகொண்டு களம்வேட்ட
அடுதிறல் உயர் புகழ்வேந்தே" (ம.கா,பா.வரி.127 - 130)

என்பதன் மூலம் செழியனின் போர் வலிமையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். செழியன் இத்தலையாலங்கானத்துப் போர் பற்றிய செய்திகள் புறநானூற்றுப் பாடல்களிலும், அகநானூற்றுப் பாடல்களிலும் பேசப்பட்டுள்ளன.

"தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத்தொருமையும்
நின்னொரு தூக்கிய வென்வேற் செழிய" (புறம்,பா.19,வரி. 2 - 4)

என்ற புறநானூற்றுப் பாடல் வழியாகவும்

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங்கானத்து தகன்றலை சிவப்ப" (அகம்.பா.36,வரி. 13 - 14)

என்ற அகநானூற்றுப் பாடல் வழியாகவும் தலையாலங்கானத்துப் போர்ச்சிறப்பும் வெற்றிச் சிறப்பும் பற்றி அறியலாம்.

**நிலையாமையை உணர்த்துதல்**

செழியனுக்கு நிலையாமையை உணர்த்துவதன்பொருட்டு எழுந்தவையே மதுரைக்காஞ்சி.உலக நிலையாமை, வாழ்வு நிலையாமை, செல்வ நிலையாமை போன்ற

பல்வேறு நிலையாமையை அறிவுறுத்துவதாக அமையும் இந்நூலை மாங்குடி மருதனார், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உணர்த்தும் வண்ணம் பாடப்பட்டது. இந்நூல் மதுரை நகரின் பெருமையை முழுவதும் கூறினாலும், முதல் நான்கு வரிகளில் நிலையாமையின் ஆழ்ந்த கருத்துகளை உள்ளுறையாகக் கூறுகிறது.

"ஓங்குதிரை வியன்பரப்பின்
ஒலிமுந்நீர் வரம்புஆக
தேன்தூங்கும் உயர்சிமைய
மலைநாறிய வியன்ஞாலத்து" (ம.கா,பா.வரி.1- 4)

கடலின்கண் எழும் உயர்ந்த அலையானது நிலைபேறின்றி அழிதல் போல, இவ்வுலகமும் அதன்கண் அமைந்த பொருளும் மாறி மாறி தோன்றுதலும், அழிதலும் உடையது. உலகில் வாழும் மக்கள் அனைவரும் பசியும் பிணியும் அற்று, வசியும் வளனும் சுரந்து இன்புற்று வாழ்வதற்கு அவர்தம் நல்லொழுக்கமே காரணம்.

மாறாகத் தீயொழுக்கத்தின்கண் நடப்பாராயின் மழை மறுத்து உலகத்தே பசியும் பிணியும் உண்டாகும். மக்கள் ஒழுக்கத்தில் நிலைத்தற்குக் காரணம் வேந்தர்களின் ஒழுக்கமாகிய செங்கோண்மையே ஆகும். பகைவரை வீழ்த்திப் பலவகையான வளமையும், செழுமையும் பெற்று வாழ்ந்த மன்னர்கள் பலர். கடற்கரையில் ஓசையுடன் கூடிய அலையால் ஏற்பட்ட மணலின் எண்ணிக்கையை விட, இவ்வுலகைப் புகழுடன் ஆண்டு, பிறப்பின் பயன் அறியாது பயனின்று அழிந்தோரே அதிகம் என்பதை,

"கரைபொருது இரங்கும் கனைஇரு முந்நீர்
திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" (ம.கா,பா.வரி.235 - 237)

என்னும் பாடல் வரிகள் புலப்படுத்தும். அறக்கள வேள்வி செய்யாது மறக்கள வேள்வி செய்த முன்னோர் பலரும் நிலையில்லாது மாண்டொழிந்தனர். அவர்கள் வழி வந்த நீயும் அவர்கள் செய்தவற்றையே செய்யாது நிலைபேருடைய வீடு எய்தும் நெறியினைக் கொள்வாயாக என்று மாங்குடி மருதனார் எடுத்துரைக்கிறார்.

**நெடுஞ்செழியனின் சான்றாண்மை**

நரை, திரை மூப்புச் சாக்காடுகளை விலக்கும் பெருமை உடைய தேவருலகத்தில் கிடைக்கப் பெறும் அமிழ்தம் ஒரு பொய் கூறுவதால் கிடைக்கும் என்றாலும் பொய் கூறாது, மெய்யுடனே நட்பு கொள்வான் செழியன். கடலினை எல்லையாகக்கொண்ட இவ்வுலகத்தாரும், வானுலகத்தாரும் ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்றாலும் அதற்குச் சிறிதும் அஞ்சாமல் எதிர் கொண்டு நிறகும் வலிமையும் ஆற்றலும் உடையவன் செழியன். தென்திசையில் உள்ள மலைகள் எல்லாம் நிறையும் படி வானன் என்ற அசுரன் வைத்தப் பெரும் செல்வம் கிடைப்பதாயினும், அது பழியோடு கிடைக்குமாயின் அதை அடைய நெஞ்சானும் நினைக்கமாட்டான்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு" (திருக்குறள். 231)

என்னும் குறளின் கருத்துப்படி உயர்செல்வங்களைப் பலருக்கும் விரும்பி அளித்து அதன்மூலம் பெருமையும் புகழும் கொள்பவன் செழியன். இத்தகு பெருமைகள் கொண்ட உனக்கும் ஐம்புலனுக்கும் என்ன என்பது நீ அறிய வேண்டிய உண்மை. வாழ்வின் உண்மைப் பொருளை அறியவியலாது தடுக்கும் மன மாசுகளைப் போக்கிக் கொண்டால், உலகமெல்லாம் பரவித் திகழும் உயர்ந்த உன்புகழ் நின்று நிலைபெறும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

**முடிவுரை**

மதுரை மாநகரை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மன்னர் பரம்பரையின் சிறப்பினையும் இவ்வழி வந்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஊர்ச்சிறப்பு, போர்ச்சிறப்பு, கொடைச்சிறப்ப் படைச் சிறப்புகளையும் இவற்றோடு உலக நிலையாமை பற்றியும் மாங்குடி மருதனார் எடுத்துரைத்துள்ளார். செழியனின் சான்றான்மை நூல்வழி விளக்கப்பட்டுள்ளது. இத்தகு சிறப்புப்பெற்ற பாண்டியன் மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தது சிறப்புக்குரியது.

**பார்வை நூல்கள்**


- சாமிநாதையர்.உ.வே, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்.
- சதாசிவபண்டாரத்தார், தி.வை -பாண்டியர் வரலாறு.
- சாம்பசிவன். ச, மாநகர் மதுரை.
- சுப்பிரமணியன்.ச.வே, மதுரைக்காஞ்சி.
- தங்கவேலு. கோ, தமிழகவரலாற்று வரிசை - தொ-11,12.
- துரைசாமிபிள்ளை.ஔவை.சு, புறநானூறுதொ -1.
- நடராசன். சு.வே, தென்னவன் மதுரை.
- வேங்கடசாமிநாட்டார். ந.மு, அகநானூறு.
- இரத்தினசாமி, சங்ககாலஅரசர்கள்.
- இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டுஆராய்ச்சி.